# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

## சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

**மானியக் கோரிக்கை எண்.15**

அறிவிப்புகள்

**2021 – 2022**

**சிவ. வீ. மெய்யநாதன்**

சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை
மற்றும் இளைஞர் நலன்,
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை 2021 –2022 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

## சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

### 1. சுற்றுச்சூழல் துறைக்கு ஒரு பசுமைக் கட்டடம்

தமிழக அரசின் குறிக்கோளான சுற்றுச்சூழல் குறித்த பிரச்சனைகளை வடிவமைக்கவும், அதனைச் சிறப்பாக செயல்படுத்தவும் 1995 ஆம் ஆண்டு சுற்றுச் சூழல் துறை உருவாக்கப்பட்டது.

இத்துறை, தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மைக் குழுமம், சுற்றுச்சூழல் தகவல் மையம், புவியியல் தகவல் அமைப்பு மையம் மற்றும் தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கி, அவற்றை நிர்வகிக்கும் துறையாக செயல்படுகிறது.

மேலும் 2021-2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளபடி 'தமிழ்நாடு காலநிலை மாற்ற அமைப்பு' தமிழ்நாட்டில் உருவாக்கப்படவுள்ளது. இதுபோன்றதொரு அமைப்பு இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில் தான் உருவாக்கப்படவுள்ளது. இவ்வமைப்பின் பணிகளும் தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை மூலமாக செயல்படுத்தப்படும்.

மேற்கண்ட விரிவான பணிகளைக் கொண்ட சுற்றுச்சூழல் துறையானது, தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, சுற்றுச்சூழல் துறை சிறந்த வகையில் செயல்படும் விதமாக உரிய தொழில் நுட்பங்களுடன் கூடிய பசுமைக் கட்டடம் 20 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.



## 2. மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை புத்தாய்வு திட்டம் (Green Fellowship Programme)

சுற்றுச்சூழல் தொடர்பான செயல்பாடுகளில் இளைய தலைமுறை மற்றும் மாணவர்களை ஈர்க்கும் வண்ணம் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்கும், இயற்கையைப் பாதுகாக்கும் விதமாக காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் நோக்கத்துடன் புதிய பசுமைத் திட்டங்களைக் கண்டறிவதற்கும், எளிய தொழில்நுட்ப வழிமுறைகளை உருவாக்கவும், 'மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை புத்தாய்வு திட்டம் (Green Fellowship Programme)' தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்படி சுற்றுச்சூழல் நலனில் அக்கறை கொண்ட தகுதியுடைய நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் மாவட்ட ஆட்சியர்களுடன் ஒன்றிணைந்து, அம்மாவட்டத்தின் பசுமைக் கனவுகளை நிறைவேற்ற உதவிகரமாக இருப்பார்கள்.

### 3. சிறந்த சுற்றுச்சூழல் மிக்க அழகிய கடற்கரைக்கான நீலக்கொடி சான்றிதழ் பெறுவதற்கான நடவடிக்கை

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் ஒரு அமைப்பாக விளங்கும் ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மை நிறுவனம் (SICOM), நீலக்கொடி திட்டத்தின்கீழ், செங்கல்பட்டு மாவட்டம் கோவளம் கடற்கரையை தேர்வு செய்து பரிசோதனைத் திட்ட அளவில், அழகியல் மற்றும் தூய்மைப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இதேபோல் 2021 – 2022 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் ஒரு கடற்கரைக்கு 10 கோடி ரூபாய் வீதம், இரு கடற்கரைகளுக்கு 20 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை மூலம் கடற்கரைக்கான நீலக்கொடி சான்றிதழ் திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், 5 வருடங்களில் (2021–2026) 100 கோடி ரூபாய் செலவில் பல கடற்கரைகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.



### 4. தொழிற்சாலைகளை இயக்குவதற்கான இசைவாணை ஒவ்வொரு ஆண்டும் வழங்குவதற்கு பதிலாக தகுதியான தொழிற்சாலைகளுக்கு கால அளவினை நீட்டித்து தொகுப்பாக வழங்குவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளை மாசு குறியீட்டு அளவின் அடிப்படையில் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளையாக வகைப்படுத்தி, அவைகள் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981, ஆகியவற்றின் கீழ் இயக்குவதற்கான இசைவாணையை வாரியத்திடமிருந்து பெற வேண்டியது கட்டாயமாகும். இந்த இசைவாணை சிவப்பு வகை தொழிற்சாலைகளுக்கு ஒரு ஆண்டு கால அளவும், ஆரஞ்சு மற்றும் பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு இரண்டு ஆண்டுகள் கால அளவும் கொண்டதாக வழங்கப்பட்டு வந்தது. தற்போது சிவப்பு, ஆரஞ்சு, பச்சை வகை தொழிற்சாலைகளை இயக்குவதற்கான இசைவாணை பெறுவதற்கான கால அளவு முறையே 5/10/14 ஆண்டுகள் என்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நீட்டித்துள்ளது. இருப்பினும் நடைமுறையில் பெரும்பாலான தொழிற்சாலைகள் ஓராண்டிற்கான இசைவாணையையே பெற்று

வருகின்றனர். எனவே தற்போது எளிதாக தொழில் செய்தல் எனும் அரசின் கொள்கையின் அடிப்படையில், இந்நிதியாண்டு முதல் மேற்கண்ட கால நீட்டிப்பு குறித்த விழிப்புணர்வை தொழிற்சாலைகளுக்கு ஏற்படுத்தி அவர்கள் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை வகை தொழிற்சாலைகளை இயக்குவதற்கு முறையே 5/10/14 ஆண்டுகளுக்கான இசைவாணைகளை தகுதியான தொழிற்சாலைகளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**5. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முனைப்புடனும் மற்றும் முன்மாதிரியாகவும் செயல்படும் தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு "பசுமை முதன்மையாளர் விருது" (Green Champion Award) ஒரு கோடி ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வை மேற்கொள்வதில் சிறப்பாக செயல்படும் மாவட்ட ஆட்சியர்கள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பசுமை விருது வழங்கி கௌரவிக்கிறது. அவ்விருதுகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது. இதே வரிசையில் சுற்றுச்சூழலை பாதுகாக்க முனைப்புடன் செயல்படும் தனிநபர் மற்றும் நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு "பசுமை முதன்மையாளர் விருதுகள்" என்ற பெயரில் 100 விருதுகள் i) நீர் நிலைகள் பாதுகாப்பு மற்றும் நீர் பாதுகாப்பு ii) சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாற்று மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான புதுமையான வழிமுறைகள் iii) கடலோர பகுதி பாதுகாப்பு iv) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வி

v) சுற்றுச்சூழலுக்கு உகந்த மேலாண்மை, இயற்கை மேலாண்மை ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு தலா 1 லட்சம் ரூபாய் வீதம் 100 ஆர்வலர்களுக்கு 1 கோடி ரூபாய் மதிப்பில் பரிசுத் தொகை வழங்கப்படும்.



## 6. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தை 32 கோடி ரூபாய் செலவில் நவீனமயமாக்கல்

தற்போது கழிவுகள் மேலாண்மை விதிகள் அதிக எண்ணிக்கையில் நடைமுறையில் உள்ளதால் அண்மைக்காலங்களில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பணிகள் அதிகரித்துள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான வழக்குகளில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமும், தேசிய பசுமைத் தீர்ப்பாயமும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய பணியாளர்கள் மற்றும் உள்கட்டமைப்புகளை அதிகரிக்கவும், கண்காணிப்பு நடைமுறைகளை திறம்படுத்தவும் வாரியத்திற்கு ஆணைகளை வழங்கியுள்ளன. மேலும், காலநிலை மாற்றம் குறித்த அரசாங்கங்களுக்கிடையிலான குழுவின் (IPCC) அறிக்கையில் குறிப்பிட்டுள்ள, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் புதிய சவால்களை வாரியம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, சட்ட பணிகளை திறம்பட செயலாற்றவும், சுற்றுச்சூழல் சட்டங்களை சிறப்பாக அமல்படுத்தவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கீழ்கண்டவாறு நவீனமயமாக்கப்படவுள்ளது:-

(1) திருநெல்வேலியில் இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

(2) திருச்சியிலுள்ள வாரியத்தின் மண்டல அலுவலகத்தை பிரித்து கடலூரில் இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் தேவையான பணியாளர்களுடன் கூடிய மண்டல அலுவலகம் உருவாக்கப்படுவதுடன், கடலோர பாதுகாப்பிற்கு தனி கவனம் செலுத்தப்படும்.

(3) முக்கிய தொழில் பகுதிகளான மணலி, மேட்டூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் தேவையான பணியாளர்களுடன் கூடிய அலுவலகம் ஏற்படுத்தப்படும்.

(4) நீர்நிலைகளை பாதுகாக்க சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் சென்னை பெருநகர் மற்றும் சேலம் நகரில் இரண்டு பறக்கும்படை அலுவலகங்கள் ஏற்படுத்தப்படும்.

(5) மாவட்ட அலுவலர்களுக்கு ஆய்வு பணியினை விரைந்து மேற்கொள்ள ஏதுவாக 50 புதிய வாகனங்கள் அளிக்கப்படும்.

(6) வாரியத்தின் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பணிகளை மேலாண்மை செய்ய தேவையான பணியாளர்களுடன் ஒரு தனி தகவல் தொழில்நுட்பப் பிரிவு வாரிய தலைமை அலுவலகத்தில் ஏற்படுத்தப்படும்.



## 7. தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு எதிராக பொது மக்களைக் கொண்டு பிரச்சாரம்

பிளாஸ்டிக் மாசுபாடு மிகவும் சவாலான மற்றும் ஆபத்தான சுற்றுச்சூழல் பிரச்சனையாக மாறியுள்ளது. பெருங்கடல்கள், ஆறுகள், குளங்கள், ஏரிகள் மற்றும் அனைத்து நீர் நிலைகளும் பிளாஸ்டிக் குப்பைகளால் மாசு அடைந்து நீர் வழித் தடத்தை அடைக்கின்றன. பிளாஸ்டிக் குப்பைகள் மற்றும் மைக்ரோ பிளாஸ்டிக்குகள் கடல்வாழ் உயிர்களின் பன்முகத்தன்மைக்கு ஆபத்து ஏற்படும் வகையில் உள்ளது.

தமிழ்நாடு அரசு 01.01.2019 முதல் 14 வகையான ஒருமுறைப் பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி, சேமிப்பு, போக்குவரத்து, விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவற்றிற்கு தடையை கொண்டு வந்த போதிலும், இன்னும் தடை திறம்பட செயல்படுத்தப்படவில்லை.

எனவே தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இதற்கென்று தனியாக ஒவ்வொரு [illegible] வர்த்தக சங்கங்கள், சமூக மன்றங்கள் (Social [illegible]) வணிகர் சங்கங்கள், குடிமக்கள் அமைப்புகள் ([illegible] bodies) பங்குதாரர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் [illegible]

போன்ற பல்வேறு துறைகள் மூலமாக 'மக்கள் இயக்கம்' ஒன்றை தொடங்க உள்ளது. இதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர்களின் ஆதரவு மற்றும் வழிகாட்டுதலுடன் 'பிளாஸ்டிக் தடை' தீவிரமாக அமலாக்கம் செய்யப்படும்.



## 8. சென்னை – ஆயிரம் விளக்குப் பகுதியில் பசுமைப் பூங்கா அமைத்தல்

சென்னை மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதி வரலாற்று சிறப்பு வாய்ந்ததோடு, மக்கள் நெருக்கம் மற்றும் நெருக்கமாக அமைந்துள்ள வியாபார நிறுவனங்களையும் கொண்டதாகும். எனவே இப்பகுதியின் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் விதமாக தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆயிரம் விளக்குப் பகுதியில் ஒரு பசுமை பூங்காவை அமைக்க உத்தேசித்துள்ளது.

மேலும், புவி வெப்பம் அடைவதை தடுக்கும் நடவடிக்கைகளை தொழிற்சாலைகள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பொது மக்களின் பங்களிப்போடு மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே வாரிய நிதியிலிருந்து, 2 கோடி ரூபாய் செலவில் ஆயிரம் விளக்குப் பகுதியில் பசுமைப் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

**சிவ. வீ. மெய்யநாதன்**
சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை
மற்றும் இளைஞர் நலன்,
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

# சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை
# வரைவு அறிவிப்புகள் 2021–2022

| வ. எண் | அறிவிப்புகள் | ரூபாய் (கோடிகளில்) 2021-2022 | நிதி ஆதாரம் |
| --- | --- | --- | --- |
| 1 | சென்னையில் உள்ள மெரினா கடற்கரையை அழகுபடுத்துதல் | 20.00 | வாரிய நிதி |
| 2 | புதுக்கோட்டை மாவட்டம், வடகாடு செட்டிக்குளத்தின் கரையை மேம்படுத்தி பூங்கா அமைத்தல் | 7.00 | சு.சூ.துறை |
| 3 | சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியில் பசுமை பூங்கா அமைத்து சாலை வசதியை மேம்படுத்துதல் | 2.00 | வாரிய நிதி |
| 4. | புதுக்கோட்டை மாவட்டம் மறமடக்கியில் உள்ள ஊரணி புனரமைத்து மேம்படுத்துதல் | 5.00 | வாரிய நிதி |
| 5. | புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை நகராட்சி புதுக்குளம் ஏரியை புனரமைத்து மேம்படுத்துதல் | 5.00 | வாரிய நிதி |
| 6 | மண் சார்ந்த நாட்டு மரங்களை அரசு மற்றும் தனியார் நிலங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலமாக மாபெரும் மரம் கன்றுகள் நடவுத் திட்டம் ரூ.50 கோடி செலவில் செயல்படுத்துதல். | 50.00 | வாரிய நிதி |